## 16.11 ஊரகப் பகுதிகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் – முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பணிகள்

ஊரக வளர்ச்சி (ம ) பஞ்சாயத்து ராஜ் (சி2) துறை

அரசாணை(நிலை) எண். 68 நாள் : 3.7.2006

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 93, ஊ.வ. (சி3) நாள் 26.3.1997.
2. ஊரக வளர்ச்சி இயக்குனர் சுற்றறிக்கை எண். 36791/97/ஊ.அ.நாள்11.12.97
3. ஊரக வளர்ச்சி இயக்குனர் கடிதம் ந.க.எண். 29875/06 பாரா. 22, நாள். 23.6.2006.

1. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பதிமூன்றாவது சட்டப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் 24.5.2006 அன்று தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் இவ்வரசு ஊரகப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேட்படுத்துவதில் தேவையான கவனம் செலுத்தும் என்றும், கிராமங்களில் உள்ள முக்கிய தெருக்கள் படிப்படியான கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும் என்றும் கிராமங்கள் மக்கள் பொதுவாகக் கூடும் மையப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும் என்றும் அறிவித்திருந்தார்,

2.இந்த அறிவிப்பினை தொடர்ந்து ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (ம) மாவட்ட ஊராட்சிகள் தங்கள் சொந்த நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக் குழு மானியத்திலிருந்தோ கீழ்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளித்து மேற்கொள்ளலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

(1) சிமெண்ட் கான்கீரிட் சாலைகள்

(2) தார்ச்சாலைகள்

(3) சோடியம் ஆவி விளக்குகள்

3. மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கப்படுகின்ற மாநில நிதிக் குழு மானியங்களை செலவழிப்பது குறித்து ஊராக வளர்ச்சி இயக்குநரால் படிக்கப்பட்டவை 2–ல் ஏற்கனவே கீழ்கண்டவாறு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

(1) நிர்வாக செலவுக்கான மாநில நிதிக் குழு ஆண்டு ஒதுக்கிட்டில் பத்து சதவீதம் செலவழிக்கலாம். பத்து சதவீதத் தொகை ரூ.15 லட்சத்திற்கு மேல் போகும் மாவட்ட ஊராட்சிகளில் நிர்வாகச் செலவு ரூ.15 லட்சத்திற்கு மிகாமல் மேற்கொள்ள வேண்டும்.

(2) மாநில நிதிக் குழு மானியத்தில் நிர்வாகச் செலவுக்கென ஒதுக்கப்பட்டது போக மீதமுள்ள தொகையில் 50 சதவிதம் குடிநீர் வேலைகளுக்காக தவறாமல் ஒதுக்கப்பட வேண்டும். குடிநீர் திட்டத்தின் கீழ் புதிய ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தொட்டி கட்டுதல் பழுதான மோட்டார்க்ளுக்கு பதில் புதிய மோட்டார் வழங்குதல் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு ஆழ்குழாய் கிணறு தூர் எடுத்தல் (Flushing and Fishing) ஆகிய வேலைகள் எடுத்துச் செய்யலாம்.

(3) மீதமுள்ள மானியத்தில் மாவட்ட ஊராட்சிகள் இதர பணிகளையும் எடுத்துச் செய்யலாம்.

(4) மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட ஊராட்சிகள் பணிகளை மேற்கொள்ளலாம்.

4. ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட பணிகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை மாவட்ட ஊராட்சிகளிலும் கொண்டுவர ஊரக வளர்ச்சி இயக்குநர் படிக்கப்பட்டவை 2–ல் வெளியிடப்பட்ட விதி முறைகளுக்கு கீழ்கண்ட திருத்திய வழிமுறைகளை பரிந்துரை செய்துள்ளார்.

**திருத்திய வழி முறைகள்**

1. மாநில நிதிக் குழு ஆண்டு ஒதுக்கீட்டில் 10 விழுக்காடு அல்லது ரூ.15 லட்சம் இதில் எது குறைவோ அதனை நிர்வாகச்செலவிற்காக செலவு செய்யலாம்.
2. மாவட்ட ஊராட்சிகள் மாநில நிதிக்குழு மானியத்தில் குறைந்த பட்சம் 20 சதவீதத்தினை சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைப்பதற்கும் மேலும் 20 சதவிதத்தினை கப்பி சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துவதற்கும் அனுமதிக்கலாம்.

3. இத்தகைய பணிகளுக்கான இடத்தினை தேர்வு செய்யும் பொறுப்பு மாவட்ட ஊராட்சியை சார்ந்ததாகும்.

4. மீதமுள்ள தொகையில் மற்றப் பணிகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

5 மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பயன் பெறும் வகையில் மாவட்ட ஊராட்சிகள் பணிகளை மேற்கொள்ளலாம்.

5.ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையினை ஏற்று ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (ம) மாவட்ட ஊராட்சிகள் தங்கள் சொந்த நிதியிலிருந்தோ அல்லது மாநில நிதிக் குழு மானியத்திலிருந்தோ கீழ்கண்ட பணிகளுக்கு முன்னுரிமை அளித்து மேற்கொள்ளபட வேண்டும் என அரசு ஆணையிடுகிறது.

1. சிமெண்ட் கான்கீரீட் சாலைகள்

2. தார்ச் சாலைகள்

3. சோடியம் ஆவி விளக்குகள்

மேற்கண்ட பணிகளுக்கு அளிக்கப்படும் முன்னுரிமையை அனைத்து மாவட்ட ஊராட்சிகளும் பின்பற்ற படிக்கப்பட்ட இரண்டில் வெளியிடப்பட்ட விதிமுறைகளுக்கு கீழ்கண்டவாறு திருத்திய வழி முறைகள் வெளியிடப்படுகிறது.

1. மாநில நிதிக்குழு ஆண்டு ஒதுக்கீட்டில் 10 விழுக்காடு அல்லது ரூ.15 லட்சம் இதில் எது குறைவோ அதனை நிர்வாகச் செலவிற்காக செலவு செய்யலாம்.

2. மாவட்ட ஊராட்சிகள் மாநில நிதிக் குழு மானியத்தில் குறைந்த பட்சம் 20 சதவீதத்தினை சிமெண்ட் காண்கீரிட் சாலைகள் அமைப்பதற்கும் மேலும் 20 சதவீதத்தினை கப்பி சாலைகளை தார்ச்சாலைகளாக மேம்படுத்துவதற்கும் அனுமதிக்காலம்.

3. இத்தகைய பணிகளுக்கான இடத்தினை தேர்வு செய்யும் பொறுப்பு மாவட்ட ஊராட்சியை சார்ந்ததாகும்.

4. மீதமுள்ள தொகையில் மற்றப் பணிகளை மாவட்ட ஊராட்சிகள் மேற்கொள்ளலாம்.

5. மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட ஊராட்சி அல்லது ஊராட்சி ஒன்றியங்கள் பயன்பெறும் வகையில் மாவட்ட ஊராட்சிகள் பணிகளை மேற்கொள்ளலாம்.

6. இவ்வாணையை அனைத்து ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் (மற்றும்) மாவட்ட ஊராட்சிகளுக்கு தெரியப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அசோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்